X-Ray Block

* 517 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal for the construction of an X-Ray Block and theatre in Sivaganga Government Hospital; and

(*b*) if so, the stage at which it stands?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The construction of X-Ray block in the hospital has been deferred on account of the National Emergency. The existing operation theatre in the institution is just enough for conducting operations. The question of constructing another theatre adjoining the present one is under the consideration of the Director of Medical Services.

* 518 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that an X-Ray unit has not been supplied to the Tiruchendur Government Hospital though the X-Ray block has already been constructed there; and

(*b*) if so, when the X-Ray unit will be supplied?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*). & (*b*) The X-Ray p'ant has since been supplied and installed in the hospital on 21st March 1964.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்போதுள்ள மருத்துவ முறையில் எக்ஸ்ரே இல்லாமல் நோயின் தன்மையை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வாய்ப்பு இல்லை. ஆகையால் தாலுகா தலைநகரங்களிலுள்ள மருத்துவ மனைகளிலாவது தவறாமல் எக்ஸ்ரே யூனிட்டை அமைக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தேசிய நெருக்கடி முடிந்த பிறகுதான் எல்லாம் ஆலோசனை செய்து அவசியங்களை ஆராய்ந்து செய்ய முடியும்.

திரு. சா. கணேசன் : நமக்கு வருகிற நோய்களுக்கு எல்லாம் தேசிய நெருக்கடி இருக்கிறது என்பது புலப்படவில்லை. ஆகவே இந்த நோய்களைப் பொறுத்த அளவிலாவது, தேசிய நெருக்கடி என்பதை அப்பால் வைத்துவிட்டு, தக்க கவனம் செலுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தேசிய நெருக்கடி ஒருபுறம் இருக்க பண நெருக்கடி தான் உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேசிய நெருக்கடி என்பது பண நெருக்கடிக்கு ஆகுபெயர்.